**Judicial Form No-53**
**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 4, THOOTHUKUDI.**

**Case No CC 773/2022**
**Prosecution Witness –PW 7, LW 11**

| Name: | சண்முகசுந்தரம் | Nationality: | இந்தியன் |
|---|---|---|---|
| Father's Name : | தங்கையா | Calling: | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Village: | புதுக்கோட்டை | Religion: | |
| Taluk: | தூத்துக்குடி | Age: | 53 |
| District: | தூத்துக்குடி | | |

**(Accused absent. 355 BNSS Petition filed and allowed.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w 35,36 of Criminal rules of practice 2019 on 10.03.2026**

**சாட்சி நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது**

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 11.01.2022 ம் தேதி மேற்படி தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது திருநெல்வேலி காவல் துணை தலைவர் அலுவலக N. Reference.No.125/P/Camp/DIG/TIN/21, dated 23.08.2021 மற்றும் தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக ந.க.எண்.P1/31081/42/2021 dated 26.08.2021 ன் பிரகாரம் வரப்பெற்ற திரு.சஜீன் த/பெ.சத்யராஜ், க.எண்.19/9, F2, பெரியாபள்ளி, நெய்யூர் போஸ்ட், கன்னியாகுமரி மாவட்டம் என்பவரது புகார் மனுவை பெற்று பார்வையிட்டு விசாரித்ததில் எதிர் மனுதாரர் முழுமையாக விசாரணைக்கு ஒத்துழைக்காததாலும் மேலும் மனுதாரருக்கும், எதிர் மனுதாரருக்கும் சமாதான முடிவு ஏற்படாததாலும் சம்பவத்தின் உண்மை தன்மை கண்டறிய வழக்கு பதிவு செய்தால் மட்டுமே சாத்தியம் என்பதாலும் சட்ட கருத்துரை பெற்று வழக்கு பதிவு செய்ய உயர் அதிகாரிகளின் அனுமதி பெற்று புகார் மனுவின் தன்மைகேற்ப தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவு குற்ற எண். 02/2022, ச/பி. 406, 420 இதச படி வழக்கு பதிவு செய்தேன்.

2. பின்பு முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனு மற்றும் ஆவணங்களை இணைத்து தூத்துக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.4 நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும்

விசாரணை நகலை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டேன். பின்னர் சாட்சிகள் புகார் மனுதாரர் சஜீன், பிரனேஸ் ஜோனத்தான், ஆல்பர்ட் டைட்டஸ் ஆகியோரை 11.01.2022 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 17.01.2022 ம் தேதி தட்டார்மடம் காவல் ஆய்வாளர் திரு.பி.கே.பாலோஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.01.2022 ம் தேதி திருமதி.எஸ்.பொன்னி (HDFC Bank, Assistant Manager) என்பவரை விசாரித்து இந்த வழக்கு சம்மந்தப்பட்ட வங்கி கணக்கிற்கு ஸ்டேட்மெண்ட் வாங்கி வாக்குமூலம் பதிவு செய்தேன். 25.01.2022 ம் தேதி திரு.சதீஷ்குமார்(TMB Bank, Branch Manager) என்பவரை விசாரித்து எதிரியின் வங்கி கணக்கு தொடர்பான ஸ்டேட்மெண்ட் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்னர் 31.01.2022 ம் தேதி திரு.திலீப் நவகர், மாநில வரி அலுவலர், திருச்செந்தூர் என்பவரை விசாரித்து எதிரியின் நிறுவனம் பதிவு சான்று பெறவில்லை என்று சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். 03.03.2022 ம் தேதி திருமதி.சசிகலா, உதவி ஆணையர், வரிவிதிப்பு வட்டம், செங்கல்பட்டு என்பவரை விசாரித்து 1வது சாட்சியின் நிறுவனத்திற்கு GSTIN பெறப்பட்டுள்ளது பற்றி கூறியதை வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 08.03.2022 ம் தேதி காலை 07.30 மணிக்கு க.எண்.5/73, மணி நகர், பள்ளக்குறிச்சி, சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டத்தில் வைத்து எதிரி தனசெல்வகணேஷ் என்பவரை காரணம் கூறி கைது செய்து எதிரி சகிதம் 09.45 மணிக்கு தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகம் வந்து விசாரித்த போது அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தகவலின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் ஆஜரான சாட்சிகளான பாலமுருகன்,கிராம நிர்வாக அலுவலர், மீளவிட்டான் பகுதி I, தூத்துக்குடி, குமாரலிங்கம், கிராம உதவியாளர், மீளவிட்டான் பகுதி I. தூத்துக்குடி ஆகியோர் முன்னிலையில் காலை 11.00 மணிக்கு பதிவு செய்தேன்.

4. பின்னர் தக்க வழிக்காவல் மூலம் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் வழக்கின் கோப்பை மேல்விசாரணைக்காக காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் திரு.காந்திமதி, பெண் உதவி ஆய்வாளர் அவர்களிடம் 30.03.2022 ம் தேதி ஒப்படைத்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின்**

**28.03.2022 தேதியிட்ட செயல்முறை ஆணை அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணைக்கு போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.)

Taken down by me/before me in open court,
interpreted/read over to the witness and
admitted by the deponent to be correct.

Sd/−S.Packiaraj,
Judicial Magistrate No.IV,
Thoothukudi.